

புனரமைப்பே
எமது மூச்சு



புனரமைப்பே எமது மூச்சு

பதிப்பு

வைகாசி 1993

அச்சிடுதல்

தமிழ் முரசு அச்சகம்
வவுனியா

வெளியீடு

புனர்வாழ்வுப் பிரிவு
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

Rs. 10/-

அட்டைப்படங்கள்

மூதூர் **59** ம் மைல் அகதிமுகாம்
திருமலை கிளப்பன்பேக் உரக்களஞ்சிய அகதிமுகாம்

“காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது”

அன்பான தமிழ் மக்களே!

நீங்கள் ஏற்றுக்கொள்ளாமலே உங்கள்மீது திணிக்கப்பட்டுள்ள பாசிசப் போரின் மூன்றாவது ஆண்டு நிறைவும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் எதிர்காலமோ தினம் தினம் நொருங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றின் பக்கங்களில் புலிகளாலும், அரசாலும் தமிழ் மக்கள் மீது திணித்து விடப்பட்டுள்ள தற்போதைய யுத்த வரலாறு மிகவும் கொடியதானது. வேதனை மிக்கது. இழப்புகளால் மட்டுமே எழுதப்படுகிறது.

மரபு வழி யுத்த முறைக்கு கெரில்லா தாக்குதல்கள் மாற்றப்பட்டதன் விளைவு இவ்வளவு மோசமானதாக அமைந்து விடும் என்பதை புலிகள் நம்பியிருக்கவும் மாட்டார்கள், எதிர்பார்த்திருக்கவும் மாட்டார்கள். நிலப்பரப்புகளின் மீதான தமது கட்டுப்பாட்டை தக்க வைத்துக் கொள்ள முடியாத புலிகளின் யுத்த வெறியின் விளைவு , மறுபுறத்தில் இராணுவத்தின் கண்மூடித்தனமான, ஆக்ரோஷமான முன்னேற்றங்களிற்கு பாரம்பரிய தமிழ் கிராமங்களையும், எமதினத்தின் இளைய தலைமுறையினரையும் பலியாக்கிவிட்டது.

மரபு வழி யுத்த முறைக்கு முகம் கொடுத்து எதிரியை முறியடித்து நிலப்பரப்பை மீட்கும் உத்வேகத்தில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த சிறீலங்கா இராணுவம் தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தி இயன்றளவு நிலப்பரப்பை தன் வசப்படுத்தி விடுவது என்பதில் கங்கணங்கட்டி நின்றது. விளைவு, கிராமங்கள் அழிக்கப்பட்டன. கால்நடைகள், பயிர்நிலங்கள் சேதமாக்கப்பட்டன. ஏராளமான மக்கள் கிழக்கு கரையோர நிலப்பரப்புகள் முழுதுமாக அகதிமுகாம்களை நிரந்தரமாக உருவாக்கிக் கொண்டனர். கல்வி, சுகாதாரம், உணவு, உடை போன்ற அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட இனமாக தமிழினம் மாற்றப்பட்டது.

வடக்கில் ஷெல் அடிகளும், குண்டு வீச்சுகளும், இராணுவ முன்னேற்றங்களும் எமதினத்தின் இனத்துவ பண்புகள் சிதைந்து போய் விட வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இன்று வடபுலம் கடல் பாதுகாப்பு வலயம், இராணுவ விஸ்தரிப்பு வலயம் போன்ற இராணுவ வலயங்களால் சுற்றிவளைக்கப்பட்ட ஓர் திறந்த வெளிச் சிறைகூடமாகிவிட்டது. மக்கள் அடைக்கப்பட்ட நிலையில் அடிப்படை வசதிகளின்றி புலிகளாலும், அரசினாலும் அடக்கப்பட்டுள்ளனர்.

கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் மட்டுமன்றி உயிர்வாழும் உரிமைகூட வட புல மக்களிற்கு கேள்விக்குறியாகி விட்டது. மனித உரிமை மீறல்கள் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டன. புலிகளின் வதை முகாம்களில் மாற்று கருத்துக் கொண்டவர்களும் மனிதாபிமானம் பற்றி பேசியவர்களும் வெந்து கொண்டிருக்கின்றனர், சிலர் மண்ணுள் புதைக்கப்படுகின்றனர்.

இராணுவ வலய விஸ்தரிப்புகளால் ஏற்படும் இடநெருக்கடி மேலும் மேலும் பஞ்சம், பிணி என்ற நிலைக்கு சாதாரண மக்களை தள்ளி விடுகிறது. புதிது புதிதாக மனநோயாளிகள் தெருக்களில் தோன்றுகிறார்கள். இறப்பு வீதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. நோய்களினால் மரணிப்பவர்களின் தொகையும் அங்கவீனர்களாக பிறக்கும் சிசுக்களின் தொகையும் என்றுமில்லாதவாறு பெருகிவிட்டது.

கல்விக்கூடங்கள் தெருக்களிலும், மரநிழல்களிலுமாக மாற்றப்பட்டு விட்டன. அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள் எதுவுமின்றி கல்வி நிலை சீரழிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தின் போக்கில் பிடிப்பில்லாத இளைஞர்கள் புலிகளின் கடுமையான போக்குவரத்து விதிகளையும் மீறி உரிய “ஒழுங்கு”களூடாக வடபுலத்தை விட்டு ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள். வசதி படைத்தவன் பிறதேசங்களிலும், வசதியற்றவன் கொழும்பு நகரிலும் அடிப்படை வாழ்வை உறுதிப்படுத்த தஞ்சம் கோருகிறான்.

ஆயுத மோகத்தில் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இனத்தின் புதிய தலைமுறைகள் யுத்த கருவிகளை தவிர வேறெதையுமே தெரிந்து வைத்திராத காட்டு மிராண்டி சமூக வாழ்வை நோக்கி அவர்களை அறியாமலேயே தள்ளப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்கால சந்ததியின் நிகழ்கால அழிவை கண்டும் கூட அதைத் தடுத்திட முடியாத இயலாமையில் மூத்தவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

மறுபுறத்தில் கிழக்கில் பெரும் பகுதி விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் என பிரகடணப்படுத்தப்பட்டாலும் கூட அகதிமுகாம் வாழ்க்கையில் எந்தவித மாற்றத்தையும் எம் மக்களால் காணமுடியவில்லை. கிழக்கின் எல்லைப் புற கிராமங்கள் நிரந்தரமாக அழிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்கள் என்ற அடையாளங்கள் நீண்ட நாள் யுத்தத்தில் தொலைக்கப்படுகின்றன. அகன்ற கிழக்கு மாகாணத்திலான தமிழ் குடிசன பரம்பல் கரையோரப்பகுதிகளிற்கு ஒடுக்கப்பட்டு விட்டது. மறுபுறத்தில் துரித அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள மக்கள் வடகிழக்கின் வெளிப்புறத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு பாரம்பரிய தமிழ் கிராமங்களிலும் - தமிழ் மக்கள் கைவிட்டு சென்ற நிலங்கள் -அரச காணிகளிலும் அத்துமீறிக் குடியேற்றப்பட்டு கிழக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்கும் திட்டம் வேகமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இந்நாட்டின் சிங்கள பேரினவாதகட்சிகளும்கூட, தெற்கில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாமல் வடக்கு கிழக்கில் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயனற்ற யுத்தத்தினை தொடர்ந்தும் இந்த நிலையில் வைத்திருப்பதன் மூலம் தமிழினத்தை கிழக்கில் சிறுபான்மையாக்கி சிதறடிக்கவும், வடக்கில் அரசியல் அநாதைகளாக்கி, அகதிகளாக ஓடவிட்டு ஆரோக்கியமற்ற, தேசிய இனப் பண்புகளை இழந்த உதிரி இனக்குழு என்ற நிலைக்கு கொண்டு வரவும் இணைந்து செயற்படுவதை உணரமுடிகிறது. இதன் மூலம் தமிழ் தேசிய வாதத்தின் முதுகெலும்பை உடைத்தெறிந்து விடலாம் என நம்புகின்றன போல தெரிகிறது.

இந்த நிலையில் தமீழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் பிரிவாகிய ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாம் இனஅழிவை தடுத்து நிறுத்த எம்மால் இயன்றளவில் அரசியல், புனருத்தாரன ரீதியில் உறுதியான ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை காலத்திற்கேற்ப நடைமுறைப்படுத்தி வருகிறோம். நியாயமான அரசியல் தீர்வினை காண்பதற்கான சகல முயற்சிகளிலும், காத்திரமான பங்கை வகித்து வரும் நாம் சமகாலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு வேலைகளிற்கும் காலத்தின் அவசிய கடமை என்ற வகையில் முக்கியத்துவத்தை கொடுத்துவருகின்றோம்.

எமது புனர்வாழ்வுப் பணிகளின் அளவுகள் சிறிதாக இருந்தாலும் கூட அப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தின் அடிப்படையில் அவை பெறுமதி மிக்கவை. 1990 சுடுகாடாக காட்சி அளித்த வவுனியா நகரின் தெற்குப் புறத்தில் ஓர் திறந்த வெளிக் காணித்துண்டில், வடபகுதிக்கான உணவு விநியோகத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் எம்மால் உருவாக்கப்பட்ட பொது சந்தையுடன் ஆரம்பமானதே தற்போதைய யுத்தத்தில் எமது புனர்வாழ்வு, நிவாரணப் பணிகள்.

எமது புனர்வாழ்வுப் பணிகள் குறித்து வெளிவரும் இச்சிறுநூலில் நாம் குறிப்பிட்டுள்ள, 1990 தொடக்கம் 1992 மார்கழி வரையிலான வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதில்- சுமார் 38 இலட்சம் ரூபா பெறுமதியான பணிகள் - தனி நாடுகோரி ஆயுதம் ஏந்திப் போராடிய ஓர் மக்கள் இயக்கத்தின் அரசியல் வழித் தோன்றல் என்ற வகையில் ஏராளமான இன்னல்கள், தடங்கல்கள், வசைகள் அனைத்தையுமே சந்தித்து விட்டோம், அதே நேரத்தில் நாம் எதிர்பார்த்த அனைத்தையுமே சாதிக்க முடியாமல் போனதையிட்டு வேதனையடைகிறோம்.

விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்குட்பட்ட எமது சமூகத்தின், குறிப்பாக அகதி முகாம்வாசிகளினதும், மீளகுடியமர்த்தப்பட்டவர்களினதும் அடிப்படைப்பிரச்சினைகளில் நாம் முனைப்பு காட்டுகிறோம். வதிவிட வசதி ஏற்படுத்தி கொடுத்தல், கல்விநலன், மருத்துவம், சிறுகைத்தொழில் முயற்சிக்கான உதவி போன்ற துறைகளை முதன்மையான பிரச்சினைகளாக இனம் கண்டு கொண்டு செயற்படுகிறோம். பல பகுதிகளில் சிறு அளவிலான மருத்துவ உதவிகள், மரணச்சடங்கு உதவிகள் முழுக்க முழுக்க எமது ஸ்தாபனத்தினாலேயே முன்வந்து வழங்கப்பட்டு வருவது இன்று வழக்கமான ஓர் விடயமாகி விட்டது.

நாம் எமது புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, ஸ்தாபன நிதியை பெருமளவில் பயன்படுத்திக் கொண்டாலும் கூட எமது நடவடிக்கைகள் உணர்வு பூர்வமானதொன்றாக அமைய வேண்டும் என்பதன் அடிப்படையில் எமது உறுப்பினர்களின் சரீர உழைப்பையும் கூட கணிசமான அளவில் பயன்படுத்தி வருகிறோம். புனரமைப்பை நோக்கிய சிரமதானங்கள், வழமைநிலைக்கு வழிகோலும் விழாக்களில் நாமே முன்னிற்கிறோம். எமது மக்களுடன் துன்பத்திலும், இன்பத்திலும் கூட பங்கு கொள்கின்றோம்.

வெறுமனவே உணவு, உடை, வதிவிட மருத்துவ வசதிகளை மட்டுமே உறுதிப்படுத்துவதை விடுத்து மத சின்னங்களை பாதுகாத்தல், கலை கலாச்சார சமூகப் பண்புகள் மேலும் அழியாமல் தடுத்தல் போன்ற குறிக்கோள்களை நோக்கிய நடவடிக்கைகளையும் ஸ்திரப்படுத்தி, மனோநிலையில் கூட எமது மக்கள் ஆரோக்கியமானவர்களாக மாறவேண்டும் என்பதில் ஆவலுடன் செயற்பட்டு வருகிறோம்.

இயக்க முரண்பாடுகளிற்கு காட்டப்படும் வெறித்தனமான வியாக்கியானங்களாலும், நடவடிக்கைகளாலும் கடந்த காலத்தில் இயக்க ஆதரவாளர்கள், அப்பாவி பொதுமக்கள் கண்டு கொண்ட ஆறாத துயரங்களின் அனுபவங்கள் இன்றும் தமிழினத்தை விட்டு விலகாத நிலையிலும்கூட எமது புனர்வாழ்வுப் பணிகளில் மக்கள் காட்டிவரும் ஆர்வமும், கொண்டிருக்கும் கடமையுணர்வும், எமதினத்தின் அழிவை தடுப்பதற்கான புனர்வாழ்வு பணிகளில் இணைந்து செயலாற்றிட வேண்டும் என்ற உறுதியும் எமது பணிகளில் எம்மை என்றென்றும் உறுதியாக தடம்பதிக்க வைக்கின்றன.

எமது இறுதி மூச்சுள்ளவரை தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் உழைக்க வேண்டும் என்ற ஓர் அவா, இல்லை ஓர் வெறி நமக்குள்ளேயே தினம் தினம் பற்றிப் பரவுகிறது. இது நாமாக ஏற்படுத்திக் கொண்டதல்ல, மக்களிடம் இருந்தே பெற்றுக் கொண்டோம். எனவே மரணம் வரை நாம் உழைப்போம், உழைப்போம், உழைத்துக் கொண்டேயிருப்போம்.

புனர்வாழ்வுப் பிரிவு,
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

வவுனியா மாவட்டம்

ஏதிலிகள், வறியோர்கள் நலன் காத்தல்

ஆகஸ்ட்
1990 போர் தொடங்கி வவுனியா நகரமே அழிந்த ஒரு நிலையில், மக்களின் பட்டினியை போக்க 12,000 கிலோ அரிசி வழங்கப்பட்டது.(அப்போது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் குறைந்த பட்ச அளவும் பெற முடியாத சூழ்நிலை நிலவியது) 4,80,000

24.8.90 முல்லைத்தீவில் இருந்து பிரச்சினைக் காரணமாக வவுனியா வந்த உடப்பைச் சேர்ந்த 150 அகதிகளுக்கு அரிசி, மா, சீனி பால்மா போன்றன வழங்கப்பட்டது. 75,000

30.10.90 முதல் - 3.11.90 வரை
வடபகுதியிலிருந்து புலிகளால் விரட்டப்பட்டு கட்டங்கட்டமாக வவுனியா வந்த முஸ்லிம் ஏதிலிகளுக்கு புகலிடம் கொடுத்து அவர்களுக்கு தேவையான அரிசி, சீனி, மா, குழந்தைகளுக்கான பால்மா போன்ற அத்தியாவசிய உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன. மின்சார வசதியற்ற புகலிடங்களுக்கு மெழுகுவர்த்திகள் கொடுக்கப்பட்டன. கைக்குழந்தைகளுடனும், நோய்வாய்பட்டவர்களுடனும் நுளம்புத் தொல்லையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த இம்மக்களுக்கு நுளம்புத்திரிகளும் வழங்கப்பட்டன. 50,000

11.04.92-வவுனியா அகதி முகாம் அகதிகளுக்கு பால்மா வழங்கப்பட்டது. 15,000

12.04.92-மேற்படி அகதிகளுக்கு மரக்கறி வகைகள் வாங்கித் தரப்பட்டன. 18,000

இந்தியாவிலிருந்து வந்த முல்லைத் தீவைச் சேர்ந்த 11 ஏதிலிகள் குடும்பங்களுக்கு உடனடி உதவி வழங்கப்பட்டது. 5,500

நெடுங்குளத்தில் உதவி எவருமில்லாத ஏழை சிங்கள பெண் ஒருவருக்கு உதவி கொடுக்கப்பட்டது. 3,000

8.8.92-வவுனியாவிலுள்ள நெடுங்குளம், தாண்டிக்குளம், முருகனூர் முகாம்களில் வாழும் ஏதிலிகளுக்கு 1000 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 20,000

சின்னத்தம்பனையை சேர்ந்த தாய்த் தந்தையை இழந்த பிள்ளை ஒன்றிற்கு தொடர்ந்து பால்மா வழங்கப்பட்டு வருகின்றது. 2,000

29,500

ஏதிலியாக வந்த நால்வருக்கு உதவி கொடுக்கப்பட்டது.

சின்னப்புதுக்குளத்தைச் சேர்ந்த சிங்கள பெண்மணி ஒருவருக்கு உதவி வழங்கப்பட்டது. 500

செட்டிக்குள ஏதிலி சிறுகுழந்தைகளுக்கு பால்மா வழங்கப்பட்டது. 3,000

செட்டிக்குள ஏதிலிகளுக்கு மரக்கறிவகைகள் வாங்கி கொடுக்கப்பட்டன. 5,000

செப்ரெம்பர்
1992 வரட்சி காரணமாக குடிநீருக்கு தவித்துக் கொண்டிருந்த காத்தார் சின்னக்குளம், அண்ணா நகர் மக்களுக்கு பவுசர் மூலம் ஒரு மாத காலம் குடிநீர் வழங்கப்பட்டது. 14,000

குருமண்காட்டில் மீளக்குடியமர்ந்தோர்க்கு நிவாரண உதவிகள் உடனடியாக கிடைக்காததால் அக்காலத்தின் தேவைக்கு ஐந்து குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டது, 25,000

13.10.92-அண்ணாநகர் மக்களுக்கு உழுந்துச் செய்கைக்காக அவர்களின் காணி உழுது கொடுக்கப்பட்டன. 11,000

15.10.92 - இதே போல் காத்தார் சின்னக்குளம் மக்களுக்கும் உழுந்து செய்கைக்கு காணி உழுது கொடுக்கப்பட்டது. 11,000

புனரமைப்புகள், விழாக்கள்

31.12.90-போரின் காரணமாக இரவு நேரங்களில் மக்களின் நடமாட்டம் இல்லாமல் இருந்து - கிறிஸ்தவர்கள் இரவு நேர நத்தார் நிகழ்ச்சிகள் கொண்டாட முடியாமல் துன்புற்றனர். இவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக கழகத் தோழர்கள் இரவு நேர கரோல் நிகழ்ச்சியை

	முன்நின்று நடத்தி கிறிஸ்தவ மக்களை பங்கு கொள்ள செய்து வழமையுணர்வை ஏற்படுத்தினர். இக்கொண்டாட்டத்திற்கு வேண்டிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.	3,000
19.6.91	குருமண் காட்டிலுள்ள இரண்டு இந்துக் கோயில்கள் புனரமைத்துக் கொடுக்கப்பட்டன.	20,000
26.6.91	அழிந்த நிலையில் கிடந்த U.C குவாட்டர்ஸ் சிறுவர் பூங்கா புனரமைத்து கொடுக்கப்பட்டது.	15,000
3.7.91	மன்னார் வீதியில் அமைந்துள்ள குருமண்காட்டு சந்தி பொதுசந்தை புனரமைக்கப்பட்டது.	5,000
10.7.91	இயங்காத நிலையில் கிடந்த U.C குவாட்டர்ஸ் கலைமகள் சனசமூக நிலையமும், மைதானமும் புனரமைத்து கொடுக்கப்பட்டதுடன் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டது. நிலையத்திற்கு புத்தகங்களும் செய்திதாள்களும் வழங்கப்பட்டன.	50,000
17.7.91	சமனங்குளத்தில் சனசமூக நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு , புத்தகங்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்தும் செய்தித்தாள் வழங்கப்படுகின்றன.	15,000
18.7.91	கோயில்குளத்தில் சனசமூக நிலையமும் அமைத்து கொடுக்கப்பட்டு நூல்கள் வழங்கப்பட்டன. நாளிதழ்கள் வழங்கப்பட்டுவருகின்றன.	15,000
	தெற்கிலுப்பைக்குளம் கோயில் புனரமைத்து கொடுக்கப்பட்டது. அத்துடன் விழாவுக்கு ஒலி, ஒளி வழங்கப்பட்டது.	12,000
	கல்வீரங்குளம் கோயில் புனரமைக்கப்பட்டது.	10,000
	கூமாங்குளம் கோயில் புனரமைக்கப்பட்டது.	15,000
	சகாயமாதாபுர துர்க்கையம்மன் கோயில் விழாவுக்கும் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைக்கும், ஒலி, ஒளி உதவி தரப்பட்டது.	10,000
	கூமாங்குளத்தில் சனசமூக நிலையம் அமைக்கப்பட்டது. செய்தி தாள்கள் வழங்கப்படுகிறன.	25,000
	சின்னச் சிற்பிக்குளம் பள்ளி வாசலில் முஸ்லிம் சமய அறிவுப் பாடசாலையொன்று கட்டிக் கொடுக்கப்பட்டது.	10,000
1991ல்-	கோயில்குளம் சிவன்கோயில் விழாவின் போது அன்பர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.	5,000
1991ல்	கோயில்குளம் கண்ணன் கோயில் வருடாந்த உற்சவத்திற்கு ஒலி, ஒளி வழங்கப்பட்டது.	
1991ல்	சமனங்குளம் கோயில் திருவிழாவிற்கு உதவிகள் வழங்கப்பட்டது.	5,000
1991ல்	மருதங்குளம் கல்லுமலைப்பிள்ளையார் கோயில் திருவிழாவிற்கு சகல உதவிகளும் வழங்கப்பட்டது.	5,000
1991ல்	இரம்பைக்குளம் அந்தோணியார் தேவாலயத்து திருச்சுருப பவனிக்கு வாகன உதவி வழங்கப்பட்டது.	
1991ல்	வவுனியா நகரில் அமைந்துள்ள பௌத்த விகாரையின் விஷேட உற்சவத்திற்கு உதவிகள் வழங்கப்பட்டது.	
ஆகஸ்ட்		17,000
1991ல்	குருமண்காடு “கிறிஸ்துராஜா” தேவாலய உற்சவத்திற்கு ஒலி, ஒளி வழங்கப்பட்டது.	3,000
25.12.91	கிறிஸ்துவ மக்களின் உதவியுடன் கரோல் நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. அதற்கான செலவுகள் வழங்கப்பட்டன.	15,000
3.2.92	அழிந்து கிடந்த மகாரம்பைக்குளத்து இந்து கோயில் திருத்தம் செய்து கொடுக்கப்பட்டது.	15,000
18.3.92	கூமாங்குளத்தின் இந்து திருவிழாவின் போது அன்பர்களுக்கு அன்னக்கொடை வழங்கப்பட்டது	5,000
	வழிபாடற்ற நிலையில் கிடந்த குருமண்காட்டு பிள்ளையார் கோயில் திருத்தி கொடுக்கப்பட்டது.	15,000
	குருமண்காடு புதிய ஜெருசலேம் தேவாலயம் புனர் செய்து கொடுக்கப்பட்டது.	10,000
	பட்டாணிச்சூர் புளியங்குளம் பள்ளிவாசல் காணியில் இஸ்லாமிய சமய அறிவுப்பாடசாலை ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது.	15,000

கல்வி நலன்

25.10.90 கோயில்குளம் கணேச வித்தியாலயம் - 250 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

26.10.90 சமனங்குளம் பாடசாலை - 150 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

27.10.90 கோமரசங்குளம் பாடசாலை - 250 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

28.10.90 ஆசிக்குளம் பாடசாலை - 150 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

29.10.90 முருகனூர் பாடசாலை - 100 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

30.10.90 சின்னப்புதுக்குளம் சிங்களப்பாடசாலை 115 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

31.10.90 வெளிக்குளம் பாடசாலை - 200 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

31.10.90 இரம்பைக்களம் மகளிர் வித்தியாலயம் - 450 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

31.10.90 வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் - 600 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

வவுனியா C.C.T.M.S பாடசாலை - 300 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

சகாயமாதபுரம் சிறுவர் பாடசாலைக்கு அப்பியாசக் கொப்பிகளும், பேனைகளும் வழங்கப்பட்டதுடன் தொடர்ந்து சத்துணவு வழங்கப்படுகிறது. 3,000

செட்டிக்குளம் ஏதிலிகள் முகாமில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பள்ளி சீருடைகளும், கொப்பிகளும், பேனைகளும் வழங்கப்பட்டன. 50,000

செட்டிக்குளம் சிறுவர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது. 2,000

வீரபுரத்தில் சிறுவர் பாடசாலை அமைக்கப்பட்டு மாணவர்களுக்கான கொப்பி, பேனை வழங்கப்பட்டு, தொடர்ந்தும் பால்மா வழங்கப்படுகிறது. 10,000

01.11.90 வவுனியா சைவப்பிரகாச மகாவித்தியாலயம் 250 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

01.11.90 பண்டாரிக்குளம் பாடசாலை - 250 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

03.11.91 இரம்பைக்குளம் அந்தோனியார் சிறுவர் நிலையத்து 25 அநாதை சிறுவர்களுக்கு (ஆண்பிள்ளைகள்) பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டன. 5,000

04.11.91 இரம்பைக்குளம் திருக்குடும்ப கன்னியர் மடத்து 35 அநாதை பெண்பிள்ளைகளுக்கு பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டன. 7,000

05.11.91 இரம்பைக்குளம் தென்னிந்திய திருச்சபை அநாதை பெண்கள் இல்லத்து 45 பெண்பிள்ளைகளுக்கு பாடசாலை சீருடைகள் வழங்கப்பட்டன. 9,000

ஜனவரி 1992ல் பூந்தோட்ட பாடசாலை சீர்படுத்தி வர்ணம் பூசி கொடுக்கப்பட்டதுடன், பாடசாலை பாவனையிலுள்ள கிணறும், மைதானமும் சீரமைத்து கொடுக்கப்பட்டன. 10,000

02.02.92 அழிந்து கிடந்த மகாரம்பைக்குளத்து பாடசாலை சீரமைத்து கொடுக்கப்பட்டது. 5,000

1992 ல் மகாரம்பைக் குளத்தில் சிறுவர் பாடசாலை ஒன்று அமைத்துக் கொடுத்து மாணவர்கட்கு கொப்பி, பேனா போன்றன வழங்கப்பட்டன. 5,000

04.02.92 மகாரம்பைக் குளத்தில் பாடசாலை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது. 15,000

05.04.92 தம்பனைச் சோலையில் அழிந்து கிடந்த பாடசாலை புனரமைத்து கொடுக்கப்பட்டது. 5,000

11.03.92 கூமாங்குளத்தில் சிறுவர் பாடசாலை ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு கொப்பி, பேனை, பந்து போன்றனவும், இன்னும் பால், சீனி என்பனவும் வழங்கப்பட்டுவருகின்றன. 17,500

பெரியகுளம் சிங்கள மாணவி ஒருவரின் பரீட்சை தேவைக்கு உதவி 200

கோமரசங்குளம் பாடசாலையில் மின்சாரம் இல்லாததால் தொலைக்காட்சிக்கு பற்றரி வழங்கப்பட்டது. மாணவர்கள் தொலைக்காட்சி கல்வி பயில உதவியாக இருக்கிறது	2,500
ஆசிக்குளம் பாடசாலைக்கு சுற்றிலும் வேலி அமைத்து கொடுக்கப்பட்டது	5,000
கோயில்குளம் கணேச வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்திய குழுவிற்கு சீருடைகள் வழங்கப்பட்டது.	35,000
விபுலானந்தர் நூற்றாண்டுவிழா முன்னேற்பாட்டிற்கும் வறிய குடும்பத்து மாணவர்களின் உயர்கல்விக்காக விபுலானந்தர் புலமைப்பரிசில் நிதியத்திற்கும் உதவி செய்யப்பட்டது.	29,500

சிரமதானங்கள் (பள்ளிக்கூடங்களில்)

27.10.90,28.10.90 திகதிகளில் சமணங்குளம் பாடசாலையில் அவ்வூர் மக்களுடன் இணைந்து எமது கழக உறுப்பினர்கள் சிரமதானம் செய்ததோடு பாடசாலைக்கு தேவையான கிடுகுகளும் வழங்கப்பட்டு கழக தோழர்களாலேயே வேய்ந்தும் கொடுக்கப்பட்டது.	5,000
29.10.90 கோயில் குளம் கணேச வித்தியாலயத்தில் ஊர் மக்களுடன் கழகத் தோழர்களும் இணைந்து சிரமதானத்தின்மூலம் பள்ளிக்கூடத்தை சீர்திருத்தி கொடுத்தனர். இது சில நாட்கள் தொடர்ந்து நடந்தது.	10,000
08.11.90 முதல் 09.11.90 வரை கோமரசங்குளம் அ.த.க பாடசாலையில் ஊர் மக்களுடன் இணைந்த கழகத் தோழர்கள சிரமதானத்தில் ஈடுபட்டு சீரமைத்து கொடுத்தனர். பாடசாலைக்கு கிடுகுகள் வழங்கப்பட்டு தோழர்களாலேயே வேய்ந்தும் கொடுக்கப்பட்டது.	10,000
11.11.90 ஆசிக்குளம் பாடசாலையானது கழகத் தோழர்களாலும், அவ்வூர் மக்களாலும் சிரமதானம் செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது.	10,000
18.11.90 சின்னப்புதுக்குளம் சிங்களப் பாடசாலையானது கழகத் தோழர்களாலும், பொதுமக்களாலும், மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தின் மூலம் புனரமைக்கப்பட்டது.	5,000
1991ல் வெளிக்குளம் பாடசாலையானது பொது மக்கள் ஒத்துழைப்புடன் கழக தோழர்கள் முன்னின்று சிரமதானம் மேற்கொண்டு சீரமைத்துக் கொடுக்கப்பட்டது	2,000
1991 ல் கோயில்குளம் பாடசாலை மைதானத்தின் நடுவே பெரிய பாறைகளும், புட்டிகளும் இருந்தமையினால் அது பயன்படுத்தலுக்கு உதவாத நிலையில் இருந்தது. புல்டோசரின் துணைக் கொண்டு திருத்திக் கொடுக்கப்பட்டது.	5,000
இரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் மைதானம் சிரமதானம் மூலம் திருத்திக் கொடுக்கப்பட்டது. சுற்றி வேலி அடைக்கப்பட்டு அரங்கிற்கு நிறம் பூசப்பட்டது.	

அன்பளிப்புகள், பரிசுகள், உபகரணங்கள் உதவி

1991ல் கோயில் குளம் கணேச வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிக்கு கழகத்தினால் வெற்றிக் கிண்ணம் ஒன்று வழங்கப்பட்டது	2,500
17.04.92 தமிழ் சிங்கள புத்தாண்டையொட்டி சிங்கள கிராமமான நெடுங்குளத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில் மிதிவண்டி ஒன்று முதலாம் பரிசாக வழங்கப்பட்டது.	5,000
பட்டாணிச்சூரில் அல்கிஜ்ரா விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கித் தரப்பட்டது	5,000
மாமடுவ (சிங்களம்) விளையாட்டு கழகத்தினால் தமிழ் சிங்கள புத்தாண்டையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டு போட்டிக்கு தொலைக்காட்சி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.	5,000
ஈரற்பெரியகுளம் பிரகதி விளையாட்டு கழகத்தின் வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பின் 1 வது பரிசுக்குரிய தொலைக்காட்சி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.	5,000
ஈரற்பெரியகுளத்தில் நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சிக்கு உதவி	500
உடற்பயிற்சி போட்டியில் வெற்றிப் பெற்ற மூன்று பாடசாலைகளுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது.	8,500
ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது பாடசாலைக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றதமிழ், சிங்கள மாணவர்களுக்கு தங்க பதக்கங்கள் வழங்கப்பட்டன.	10,400

வெளிக்குளம் பாடசாலையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன.	2,500
ஆசிக்குளம், சகாயமாதபுரம் ஆகிய ஊர்களில் சனசமூக நிலையங்களக்கு நூல் அன்பளிக்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.	8,000

வீடு கட்டித் தரல்

வறிய குடும்பங்களுக்கு உறைவிட பிரச்சினைகள் போக்கும் முகமாக முருகனூரில் ஒன்றும் U C குவாட்டர்சில் ஒன்றும், இந்தியாவிலிருந்து வந்த ஏதிலிகளுக்கு சிதம்பரபுரத்தில் 16 வீடுகளுமாக அமைத்து கொடுக்கப்பட்டன.	1,75,000
26.12.91 வவுனியா - குடியிருப்பு கிராமத்தில் 5 வறிய குடும்பங்களுக்கு வீடமைத்து கொடுக்கப்பட்டன.	50,000
27.12.91 எல்லப்பர் மருதங்குளத்து 8 வறிய குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 75 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
01.01.92 இல் வன்செயலில் இடம்பெயர்ந்து சென்று திரும்பிய 8 ஏழைக் குடும்பங்களுக்கு வீடமைத்து கொடுக்கப்பட்டன.	80,000
விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் நோயாளியான ஒருவருக்கு மீண்டும் பட்டாணிச்சூரில் குடியேற வீடு ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது.	13,000
02.01.92 முருகனூரில் 6 வறிய குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 60 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
03.01.92 சமனங்குளத்தில் 9 வறிய குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 90 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
08.01.92 வேப்பங்குளத்தில் 3 வறிய குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 30 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
பண்டாரிக்குளத்தில் 15 வறிய குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 150 கட்டு கிடுகுகள் கொடுக்கப்பட்டன.	
09.01.92 தெற்கிலுப்பைகுளத்தில் 4 வறிய குடும்பங்களுக்கு 40 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
சின்னப்புதுக்குளத்தில் 3 வறிய குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 25 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
தோணிக்கல்லில் 8 ஏழைக் குடும்பங்களுக்கு வீடமைபபுக்கு 75 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
10.01.92 பண்டாரிக்குளத்தில் மேலும் 9 வறிய குடும்பங்களுக்கு 100 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
17.01.92 மகாரம்பைக்குளத்தில் 16 ஏழைக் குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 325 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
31.01.92 பூந்தோட்டத்தில் 5 குடும்பங்களுக்கு வீடமைப்புக்கு 50 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
இடம் பெயர்ந்து சென்று மீண்டும் குருமண்காட்டிற்கு குடியமர வந்த 15 குடும்பங்களுக்கு 150 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
தாண்டிக்குளத்தில் மீளக்குடியமர வந்த 2 குடும்பங்களுக்கு 15 கட்டு கிடுகுகள் வழங்கப்பட்டன.	
17.03.92 காத்தார் சின்னக்குளத்தில் தீயினால் சேதப்பட்ட குடும்பத்திற்கு வீடு திருத்தவும், வீட்டுத்தளபாடங்கள், உடைகள் வாங்கிக்கொள்ளவும் உதவிகள் செய்யப்பட்டன.	4,000
08.08.92 முல்லைத்தீவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவரை புலிகள் சுட்டுக் கொன்றதுடன் குடும்பத்தில் ஏனையோரை விரட்டியடித்துவிட்டனர். வவுனியா வந்த அவர்களுக்கு வீடு அமைத்து கொடுத்து சிறு தொழில் செய்யவும் உதவிகள் அளிக்கப்பட்டன.	20,000

மருத்துவம்

02.01.91 வவுனியா மருத்துவமனை புனரமைத்து கொடுக்கப்பட்டது. சுற்றிலும் முள்வேலி அமைக்கப்பட்டது. வர்ணம் பூசப்பட்டது சுவர்கடிகாரங்கள், படுக்கை விரிப்புக்கள் போன்றவை வழங்கப்பட்டன.	3,00,000
நோயாளிகளுக்கு கட்டில் வசதியில்லாமல் இருந்ததால் பாய்கள் வழங்கப்பட்டன.	5,000
03.10.92 இல் கூமாங்குளத்தில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான பெண் ஒருவருக்கு ஒரு ஆண்டு மருத்துவ கவனிப்புகள் வழங்கப்பட்டன.	25,000

	வன்செயலின் போது கால்களை இழந்த ஈறப்பெரியகுளத்தை சேர்ந்த சிங்களவர் இருவருக்கு செயற்கை கால்கள் பொருத்த உதவி வழங்கப்பட்டது	8,000
1992	இல் வவுனியா மருத்துவ மனையில் தங்கியிருக்கும் நோயாளிகளுக்கு குளுக்கோஸ், ஆர்லிக்ஸ், பால்மா, சீனி போன்றன இரண்டு தடவைகள் வழங்கப்பட்டது	20,000
	முல்லைத்தீவில் ஷெல் தாக்குதலில் காயப்பட்டு வவுனியா வந்த தாய்க்கும், இரண்டு வயது குழந்தைக்கும் அவசர சிகிச்சைக்காக ஊசி மருந்துகள் வாங்கி கொடுக்கப்பட்டது.	2,000
	வாகன விபத்தில் சிக்கி கால் முறிவு ஏற்பட்ட ஒருவருக்கு மருந்து வசதிகள் கொடுக்கப்பட்டது.	2,000

தொழில் திட்ட உதவி

31.12.90	கோயில் புதுகுளத்தில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 10 இளைஞர்களுக்கு சிறுகைத்தொழில் திட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு பொருட்களும் பணமும் வழங்கப்பட்டது.	7,500
02.01.91	கோமரசங்குளத்தை சேர்ந்த வறிய குடும்பத்து இளைஞர்கள் 35 பேரிற்கு வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்ளும் முகமாக பனைத் தொழில் கைப்பணி பயிற்சித் திட்டம் ஒன்று ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது.	15,000
1991	இல் ஏழை விவசாயிகளுக்கு நிலையாக வேலை வாய்ப்புக்கள் கொடுத்து லாபத்திலும் 2/3 பங்கு கொடுக்கும் முகமாக எல்லப்பர் மருதங்குளத்திலும் (12 விவசாயிகளுக்கு) கூமாங்குளத்தில் (10 விவசாயிகளுக்கு) விவசாய பண்ணை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.	3,00,000

மரணசடங்கு உதவி

ஜனவரி 1992	இல் - பூந்தோட்டத்தில் மின்சாரம் தாக்கி இறந்தவரின் மரண சடங்கிற்கு உதவி வழங்கப்பட்டது	2,000
02.02.92	தம்பனைச்சோலையில் காலமான ஒருவரின் மரண சடங்கிற்கு உதவி வழங்கப்பட்டது.	5,000
24.03.92	மகாரம்பைக்குளத்தில் காலமான வெள்ளையனின் மரணசடங்கிற்கு உதவி தரப்பட்டது.	700
	கூமாங்குளத்தில் மரணமான ஒருவரின் மரணசடங்கிற்கு பிரேதப்பெட்டி வழங்கப்பட்டது.	1,500
	இந்தியாவிலிருந்து வவுனியா வந்த முல்லைத் தீவைச் சேர்ந்த ஒருவரின் மரணசடங்கிற்கு உதவிகள் வழங்கப்பட்டது.	5,000
	பண்டாரிக்குளத்தில் காலமான ஒருவரின் மரணசடங்கிற்கு செய்த உதவி	1,500
	கூமாங்குளத்தில் வீடுதீப்பற்றி எரிந்ததினால் மரணமான ஒருவரினதும், பாம்பு தீண்டி மரணமான ஒருவரினதும் மரணசடங்கிற்கு உதவிகள் வழங்கப்பட்டன.	3,500
	காத்தார் சின்னக்குளத்தில் மரணமான இருவரின் மரணசடங்கிற்கு உதவிகள் வழங்கப்பட்டன.	2,000
	ஆசிக்குளத்தில் காலமான இருவரின் மரணசடங்கிற்கு உதவிகள் வழங்கப்பட்டன.	3,000
	சமனங்குளம், மருதங்குளம், தெற்கிலுப்பைக்குளம், கோயில்புதுக்குளம், சின்னப்புதுகுளம், இரம்பைக்குளம், கோமரசங்குளம், கோயில் குளம் ஆகிய கிராமங்களில் மரணமானவர்களின் மரணசடங்கிற்கு உதவிகள் செய்யப்பட்டன	21,500

சிரமதானம் (பொது)

05.06.91	குருமண்காடு தொடக்கம் பிள்ளையார் கோயில் வரையிலான பாதையை கழகத் தோழர்களும் பொது மக்களும் சீர்படுத்தினர்.	7,500
01.03.92	மகாரம்பைக் குளத்தில் பாவிக்க முடியாத நிலையில் இருந்த வீதிகள் சிரமதானத்தின் மூலம் திருத்தப்பட்டது	3,000
10.03.92	கூமாங்குளத்து பாதைகள் சிரமதானம் மூலம் திருத்திக் கொடுக்கப்பட்டன.	6,000
29.03.92	தோணிக்கல் பாதைகள் சிரமதானம் மூலம் சீர்திருத்தப்பட்டது.	3,500
12.06.92	குருமண்காடு சந்தியிலிருந்து யு.சி குவாட்டர்ஸ் வரையிலான பாதையை பொது மக்கள் உதவியுடன் கழகத் தோழர்கள் சீரமைத்தனர்	2,500

03.10.92	அண்ணா நகரில் பாவனையின்றிக் கிடந்த வீதிகள் சிரமதானம் மூலம் திருத்தம் செய்யப்பட்டது	1,500
	ஆசிக்குளத்திலிருந்து மடுகந்தை (சிங்கள கிராமம்) வரையிலான பாதையை தமிழ் - சிங்கள மக்களுடன் சேர்ந்து தோழர்கள் திருத்தி கொடுத்தனர்.	3,000
	செட்டிக்குளம் கிறிஸ்துவ, இந்து கோயிலகள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன	5,000
	வீரபுரம் பெரியார் பகுதி பாதைகள் சிரமதானம் மூலம் திருத்தி பாவனைக்கு கொண்டுவரப்பட்டது.	3,000
	சின்னச்சிற்பிக்குளம் முஸ்லிம் கிராமத்து பள்ளிவாசல் சிரமதானம் மூலம் திருத்தம் செய்யப்பட்டது	3,000
	புலிகளால் அநியாயமான முறையில் விரட்டியடிக்கப்பட்ட அப்பாவி முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்த்த தீவிர முயற்சி எடுத்ததின் பயனாக முதல் முதலில் பட்டாணிச்சூர் புளியாங்குளத்தில் தோழர்கள் எல்லா நிலையங்களையும் பாதைகளையும் சீர்திருத்தி கொடுத்தனர். இதனால் மீண்டும் முஸ்லிம்கள் தம் தொழுகைகளை ஆரம்பித்தனர்.	3,000

மட்டக்களப்பு மாவட்டம்

பொருட்கள் அன்பளிப்பு

03.01.92	துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.	
08.01.91	இந்துக்கல்லூரி பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.	
29.11.91	புதிய வன்னியார் தெரு வானவில் விளையாட்டு கழகத்திற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.	
03.06.91	பறக்கும் மின் விளையாட்டுக் கழகத்திற்கு சீருடைகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன	
28.02.92	நாவற்குடா விபுலானந்தா விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொடுக்கப்பட்டன	
	வாவி வீதி நியூட்டன் மோஸ் விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.	
	கல்லடி விளையாட்டுக் கழகத்திற்கு கேடயம் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டது.	10,000

புனரமைப்பு

களுவாஞ்சிக்குடி அரசினர் வைத்திய சாலையில் பொதுமக்கள் பாவனைக்கென ஆசனங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது.	3,500
கல்லடித்தெரு திரௌபதையம்மன் கோயில் திருத்த வேலைக்கு சீமெந்து வாங்கித் தரப்பட்டது.	2,500
வாவிக்கரையில் அமைந்துள்ள வீரகத்தி பிள்ளையார் கோயில் புனரமைப்புக்காக உதவி வழங்கப்பட்டது.	10,000
ஆறுமுகத்தான் குடியிருப்பு கோயில் திருத்தி தொடுக்கப்பட்டது.	
மட்டக்களப்பு மருத்துவமனைக்குப் பின்னால் உள்ள கோயில் திருத்தி கொடுக்கப்பட்டது.	3,000

தொழில் திட்ட உதவி

11.12.91	அன்னை வேளாங்கன்னி வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு மரக்கறி வியாபாரம் செய்ய உதவி வழங்கப்பட்டது.	2.000
	ஆயித்தியமலையைச் சேர்ந்த ஏதிலி ஒருவருக்கு சுயதொழில் தொடங்க உதவி வழங்கப்பட்டது.	1,000
	ஆயித்தியமலை புல்லுமலை ஆகிய பகுதிகளில் இருந்து ஏதிலிகளாக்கப்பட்டு வந்த 10 குடும்பங்களுக்கு தொழில்முயற்சிக்கு உதவி வழங்கப்பட்டன.	15,000

ஏதிலிகள், வறியவர்கள் நலன் காத்தல்

23.09.91	நாவற்குடா கலாச்சார மண்டப அகதி முகாம் குடிநீர் பிரச்சினைத் தீர்க்க கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது	12,500

கல்வி நலன்

3 ஆம் வட்டார நற்பணிமன்றத்திற்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டது	650
மண்டூர் 13 -ஆம் கிராமம் விக்னேஷ்வரா வித்தியாலயத்தில் சிறு திருத்த வேலை செய்துத் தரப்பட்டது	7,100
புதுநகர் சர்வோதய பாலர்பாடசாலையின் திருத்தவேலை செய்து கொடுக்கப்பட்டன.	1,000

திருகோணமலை மாவட்டம்

கல்வி நலன்

08.01.92 அன்பு இல்லத்தை சேர்ந்த அநாதை பிள்ளைகளுக்கு பள்ளிச் சீருடைகளும் பள்ளி உபகரணங்களும் வழங்கப்பட்டன	65,000
15.06.92 சிவானந்த தபோவனத்து மாணவர்களுக்கு பள்ளி சீருடைகளும் பள்ளி உபகரணங்களும் வழங்கப்பட்டன	65,000
2 ஆம் கட்டை ஏதிலிகள் முகாமில் சிறுவர் பாடசாலை அமைக்கப்பட்டது	3,200
18.08.92 பச்சனூர் ஏதிலிகள் முகாமிலுள்ள மாணவ மாணவிகளுக்கு பள்ளி சீருடைகளும், அப்பியாச கொப்பிகள், எழுதுகோல்கள், கொம்பஸ் போன்றனவும் வழங்கப்பட்டன	32,000
18.11.92 புனிதசவேரியர் பாடசாலைக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன	7,000
கலைமகள் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவுக்கு புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன	6,000

ஏதிலிகள், வறியவர்கள் நலன் காத்தல்

20.08.92 சைனாபஜாரைச் சேர்ந்த வறிய குடும்பமொன்றுக்கும் பச்சனூர் ஏதிலி ஒருவருக்கும் உதவிகள் செய்துத் தரப்பட்டது	1,500
சோலையடி ஏதிலிகள் முகாமைச் சேர்ந்த சிலருக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டன.	3,700
உவர்மலை வறிய பெண்மணி ஒருவருக்கு உதவி கொடுக்கப்பட்டது	

மருத்துவம்

மூதூரைச் சேர்ந்த கண்பார்வை இழந்த ஒருவருக்கு கண் சிகிச்சை செய்வதற்கு உதவப்பட்டது .	4,000
3 ஆம் கட்டை ஏதிலி ஒருவருக்கு மருத்துவ உதவி செய்துத்தரப்பட்டது.	1,500

புனரமைப்பு

16.06.92 லிங்க நகர் முருகன் ஆலயம் புனரமைத்து கொடுக்கப்பட்டது.	15,000
இந்தியாவிலிருந்து திரும்பி வந்த ஏதிலி ஒருவருக்கு பாலையூற்றில் தன் வீட்டைத் திருத்துவதற்கு உதவி செய்யப்பட்டது	3,500
19.01.93 கந்தளாயைச் சேர்ந்த சிங்களவர் ஒருவருக்கு வீடுத் திருத்த உதவி வழங்கப்பட்டது	

தொழிற்திட்ட உதவி

29.06.92 லிங்கநகரைச் சேர்ந்த 3 குடும்பங்களுக்கு கோழிப் பண்ணை செயற்படுத்த உதவி தரப்பட்டன.	10,000
21.09.92 மேலும் உவர்மலை, லிங்கநகர், பாலையூற்று சாம்பல்தீவு போன்ற இடங்களில் வாழும் 10 விதவைப் பெண்களுக்கு கோழிப்பண்ணைகள் அமைத்து தரப்பட்டன	20,000
பாலையூற்றில் இன்னொருவருக்கு சுயதொழில் முயற்சிக்கு உதவப்பட்டது	5,000
18.01.93 கந்தளாய், பேராறு 2 ஆம் யுனிட்டை சேர்ந்த மாதர் சங்கத்திற்கு தையல் பயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டன	15,000

அம்பாறை மாவட்டம்

கல்வி நலன்

13.08.92	காரைத்தீவு ஏதிலிகள் முகாம் மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதுடன், சிறுவர்பாடசாலைக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டது	10,000
18.09.92	காரைத்தீவு ஏதிலி முகாமில் தங்கி வரும் மல்வத்தை பகுதி மாணவர்களுக்கு கல்வி வசதிக்காக நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது	12,000
10.10.92	காரைத்தீவு ஏதிலி மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டது	12,500
நவம்பர் 1992	வீரமுனை பாடசாலைக்கு முட்கம்பி வேலி அமைக்கப்பட்டது	6,000
15.12.92	காரைத்தீவு விபுலானந்தர் விளையாட்டுக் கழகத்திற்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.	1,000

ஏதிலிகள், வறியோர் நலன் காத்தல்

30.12.91	காரைத்தீவு ஏதிலிகள் முகாமிற்கு ஈமக்கிரியைகளுக்கான உதவி தரப்பட்டது.	2,000
	கல்முனை கர்மேல் பாத்திமா கல்லூரி முகாம் ஏதிலிகளுக்கு உடுதுணிகள் வழங்கப்பட்டன. (அத்துடன் வவுனியாவில் எமது தோழர்களினால் சேகரிக்கப்பட்ட உடுப்புகளும் வழங்கப்பட்டன.)	35,000
18.07.92	வீரமுனையைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு பாய்களும், பள்ளி மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.	1,00,000

தொழிற் திட்ட உதவி

21.10.92	யுத்தத்தின் போது அங்கவீனமடைந்த தோழர் ஒருவருக்கு சுயதொழில் திட்டத்திற்கு உதவி வழங்கப்பட்டது.	7,000
	கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி ஏதிலி ஒருவருக்கு சுயதொழில் தொடங்க மிதிவண்டி ஒன்று வாங்கி கொடுக்கப்பட்டது.	1,500

புனரமைப்பு

	பாண்டிருப்பில் விதவைகள் 16 பேருக்கு வீடுகள் திருத்தியும், கட்டியும் கொடுக்கப்பட்டன	35,500

மன்னார் மாவட்டம்

மருத்துவமனை, மருத்துவ உதவிகள்

13.7.92	மன்னார் மருத்துவமனை திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் வர்ணம் பூசப்பட்டது. இது எமது தோழர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது.	85,500
16.7.93	செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் நினைவாக நோயாளிகளுக்கு உணவு வழங்கப்பட்டது.	5,000
	மன்னாரில் விசர்நாய்க் கடியால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மருந்தில்லாது வேதனையுற்ற வேளை உடனடியாக விசர்நாய்ககடி ஊசி மருந்துகள் வழங்கப்பட்டன.	14,000
	கண்பார்வையற்ற ஒருவருக்கு உதவி வழங்கப்பட்டது.	1,500

புனரமைப்பு

8.8.92	பனங்கட்டி க் கொட்டில் கிராமத்தில் சனசமூகநிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.	20,300
20.8.92	சாவக்காடு,பள்ளிமுனை, பெரியக்கடை,பனங்கட்டி கொட்டில்,எமில் நகர், ஸ்ரேசன் ரோட் ஆகிய இடங்களில் உள்ள 115 ஏழைக்குடும்பங்களுக்கு கிடுகுகள் வழங்கப்பட்டன.	60,000
	தாழ்வு பாடு கிராமத்து நூலகத்துக்கு வர்ணம் தீட்டப்பட்டு தேவையான தளபாடங்களும் வழங்கப்பட்டன.	10,000

பேசாலையில் தீக்கு இரையான வீடு கட்ட உதவி வழங்கப்பட்டது. 1,800

சிரமதானம்.

29.8.92 பனங்கட்டிக்கொட்டில் கிராமத்தது பாதையின் இரு மருங்குகளிலும் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு பாதையும் திருத்திக் கொடுக்கப்பட்டது. 6,000

கோவில்

20.7.92 செபஸ்டியார் கோயில் ஆண்டு விழாவுக்கு அரிசி தேங்காய் பொன்ற பொருட்கள் வழங்கப்பட்டது. 4,500

7.8.92 வைரவர் கோயில் பொங்கல் விழா சிறப்பாக நடத்திக்கொடுக்கப்பட்டதோடு அன்னதானமும் வழங்கப்பட்டது. 9,000

உப்புக்குளம், மூர்வீதி ஆகிய பள்ளிவாசல்களுக்கு பேரிச்சம் பழம் வழங்கப்பட்டது. 3,500

அந்தோணியார் கோயில் ஆத்மாக்கள் திருநாளுக்கு உதவி வழங்கப்பட்டது. 4,000

மரணசடங்கு

சின்னக்கடையில் மரணமடைந்த ஒருவருக்கு மரணசடங்கு செய்ய உதவி வழங்கப்பட்டது. 2,500

முள்ளிக்குளத்தைச் சேர்ந்த, சன்னி வில்லேஜ் அகதிமுகாமில் தங்கி இருந்த ஒருவரின் மரணசடங்கு உதவி வழங்கப்பட்டது. 5,000

போரினாலும், புலிகளினாலும் பாதிக்கப்பட்ட கழகஉறுப்பினர்களின் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு உதவியாக 1,53,000/- வழங்கப்பட்டது.

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட விரும்பிய 13 கழக (குடும்ப) உறுப்பினர்களுக்கு உதவித் தொகையாக 3,75,000/- 1992 வைகாசி, புரட்டாதி மாதங்களில் வழங்கப்பட்டது.



மன்னார்
மருத்துவமனையின்
புனரமைப்பு
வேலைகள்



வீரமுனையில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன



வடக்கில் இருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் சகோதரர்கள்



மட்டக்களப்பு மருத்துவமனைக்கு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)